# பொருளாதார முறைமை



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## பொருளாதார முறைமை

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சமூகத்தினுள் வாழும் மக்கள் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட ஒரு இயந்திரம் அல்லது நிறுவன ரீதியான செயல்திட்டம் **பொருளாதாரமுறைமை/பொருளாதார ஒழுங்கமைப்பு** எனப்படும்.

- பொருளாதார முறைமையொன்றில் மனிதனால் உருவாக்கப்பட்டதும் சட்டத்திற்கு அமை-வானதுமான நிறுவனத்தொகுதிகள் செயற்படுகின்றன.
- அந்நிறுவனத் தொகுதிகள் மனிதர்களை உள்ளடக்கிய உயிருள்ள அலகாகக் காணப்படுவதுடன் அவை உயிரோட்டம் உடையதாக அமைகின்றன.
- பௌதீக முறைமையொன்றில் நிலவுகின்ற இயற்கைப் பொருட்களைப்போல் பொருளாதார முறைமையில் காணப்படும் பொருட்களாக இருப்பது அங்குள்ள பொருளாதார நிறுவனங்களாகும்.
- அந்தந்த நாடுகளில் காணப்படுகின்ற சமூக, கலாசார வரலாற்றுக் கோலங்களின் அடிப்படையில் நிறுவன ரீதியான அலகுகளும் வெவ்வேறு வடிவங்களில் அப்பொருளாதாரங்களில் காணப்படுகின்றன.

## பொருளாதார முறைமையொன்றில் காணப்படும் அடிப்படைகள்

- வீட்டுத்துறை
- அரசதுறை
- வணிகப்பிரிவுகள்
- தொழிலாளர் அமைப்புக்கள்
- அரசல்லா அமைப்புக்கள்
- சந்தைகள்
- ஊக்குவிப்புக்கள்
- சட்டக்கட்டமைப்புக்கள்
- பழக்கவழக்கங்கள், மரபுகள், கலாசாரங்கள்






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வீட்டுத்துறை

ஒரே வரவுசெலவுத்திட்டம், ஒரே கூரையின் கீழ் வாழும் மக்கள் பிரிவினர் **வீட்டுத்துறை** ஆகும்.

- வீட்டுத்துறையினர் காரணிச்சேவையினை நிரம்பல் செய்பவர்களாகவும், உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளை நுகர்வு செய்பவர்களாகவும் காணப்படுவர்.
- வீட்டுத்துறையினர் காரணி உடமையாளர்களாகவும் காணப்படுவர்.
- வீட்டுத்துறையினர் மேற்கொள்கின்ற பொருளாதாரத் தீர்மானங்கள்/ வீட்டுத்துறையினரின் தொழிற்பாடுகள் வருமாறு



* காரணி நிரம்பல் தொடர்பாகத் தீர்மானம் எடுப்பது.
* பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வது
* வருமானத்தில் எத்தனை வீதத்தை நுகர்விற்கும், எத்தனை வீதத்தை சேமிப்பிற்கும் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வது.

## அரசாங்கத்துறை

தீர்மானம் மேற்கொள்வது தொடர்பாக அதிகாரமுள்ள அமைப்பு **அரசாங்கத்துறை** ஆகும்.

- அரசாங்கத்துறையின் பொருளாதாரத் தொழிற்பாடுகளாவன



* பொருளாதார மற்றும் தனியார் உரிமைகளைப் பாதுகாத்தல்.
* தொழிற்சாலைகளையும் வணிக நிலையங்களையும் கண்காணித்தல்.
* பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்
* நியாயமான விலையில் பொருட்களையும் சேவைகளையும் விநியோகித்தல்

**தொழிலாளர் அமைப்புக்களின் தொழிற்பாடுகள்**

* தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
* வேலைவாய்ப்பு உற்பத்தி தொழிநுட்பம் சம்பளமட்டம் என்பவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தல்.
* பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல்.
* வருமான செலவுப் பங்கீட்டில் நியாயத்துவத்தை ஏற்படுத்தல்.
* சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல்.

தொகுப்பு திரு இ.பிரபாகரன், பொருளியல் ஆசிரியர் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**அரசல்லா அமைப்புக்களின் தொழிற்பாடுகள்**

* வறுமையை நீக்குதல்.
* சுற்றாடலைப் பாதுகாத்தல்.
* மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
* இயற்கை அனர்த்த நிலைமைகளில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகச் செயற்படுதல்.

## வணிக நிறுவனங்கள்

வணிக நிறுவனங்கள் என்பதனுள் தனியார் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பன அடங்கும்.

வணிக நிறுவனங்களின் தொழிற்பாடுகளாவன

* உற்பத்திக் காரணிகளை/காரணிச்சேவைகளை கொள்வனவு செய்தல்.
* எதனை, எந்தளவு, யாருக்கு உற்பத்தி செய்தல் என்பது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்ளல்.



## பல்தேர்வு வினாக்கள்

பொருளாதார முறைமையொன்றில் தீர்மானம் மேற்கொள்வதுடன் தொடர்புடைய விசேட பிரிவினரல்லாதது எது?
1. வீட்டுத்துறை, அரசதுறை
2. அரசதுறை, வணிகத்துறை
3. வீட்டுத்துறை, வணிகத்துறை
4. தொழிலாளர் அமைப்பு, அரசல்லா அமைப்புக்கள்
5. சட்டக் கட்டமைப்புக்கள், பழக்க வழக்கங்கள்.

வீட்டுத்துறையினரின் தொழிற்பாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவது
1. உற்பத்திக்காரணிகளைக் கொள்வனவு செய்தல்.
2. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல்.
3. உற்பத்திக்காரணிகளை நிரம்பல் செய்தல்.
4. நியாயமான விலையில் பொருட்களை விநியோகித்தல்.
5. பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்.

தொகுப்பு திரு இ.பிரபாகரன், பொருளியல் ஆசிரியர் (யா/வேம்படி மகளிர் கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

உணவு, உடை, உறையுள் போன்ற விடயங்கள்
1. பல்வேறுபட்ட விருப்பங்களாகும்.
2. பல்வேறுபட்ட உயிரியற் காரணியாகும்.
3. வரையறுக்கப்பட்ட தேவைகளாகும்.
4. வரையறுக்கப்பட்ட விருப்பங்களாகும்.
5. பல்துறை சார்ந்த எண்ணக்கருவாகும்.

பொருளாதாரமல்லாப் பண்டமென்பது
1. எல்லையற்ற தேவைகளைக் கொண்ட பண்டமாகும்.
2. உற்பத்தியில் அமையச்செலவைக் கொண்டிருக்கும் பண்டமாகும்.
3. எல்லையற்ற நிரம்பலைக் கொண்ட பண்டமாகும்.
4. எல்லை அமையச் செலவைக் கொண்ட பண்டமாகும்.
5. மனிதனது விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டமாகும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk